2001 செப்டம்பர் 11] [திரு. செ. செம்மலை]

மருத்துவ நிபுணர் அதற்குரிய பயிற்சிக்கு உடனடியாக அனுப்பப்பட இருக்கிறார். தேவையான மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு கிடைத்தது போல, 37 வருடங்களாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினைக்கும், தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விடிவு காலம் பிறந்திருக்கிறது. இன்னும் 15 நாட்களில், எஞ்சியுள்ள வேலைகள் முடிந்தவுடன் இடத்தையும், முடிக்கப்பட்ட பணிகளையும் ஆய்வு செய்வதற்கு மருத்துவக் கட்டுப்பாட்டுத் துறையினுடைய இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட இருக்கிறது. அவருடைய ஆய்வுக்குப் பின்னாலே உரிமம் கிடைத்துவிடும். உரிமம் கிடைக்கப்பெற்றவுடன் கூடிய விரைவில் இந்த இரத்த வங்கி, குன்னூரில் செயல்படத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

3. விதி 110-இன்கீழ் அறிக்கைகள்

(அ) அரிசியையும் நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தல் மற்றும் நெல்லுக்கு ஆதார விலையுடன் ஊக்கத் தொகை அளித்து கொள்முதல் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-இன்கீழ், இரண்டு முக்கியமான பிரச்சினைகள் குறித்து, அவைக்கு இரண்டு அறிக்கைகள் அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருப்பிலுள்ள அரிசி மற்றும் நெல் ஆகியவற்றின் அளவு, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களின்கீழ் வழங்கத் தேவைப்படும் அரிசியின் அளவு, மாதந்தோறும் மத்திய அரசு, தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியின் அளவு மற்றும் தஞ்சை வடிகால் பகுதி விவசாயிகளின் கோரிக்கைகள் ஆகியவற்றை, 10-9-2001 அன்று, தமிழக அமைச்சரவை பரிசீலித்து ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை மேற்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கத்தக்க அளவில், அரிசி மற்றும் நெல் கையிருப்பு உபரியாக இருக்கின்ற காரணத்தினால், இன்று முதல், தமிழ்நாட்டிலிருந்து அனைத்து ரக அரிசி மற்றும் நெல்லை, மாநிலத்திற்கு வெளியே, எந்தவிதமான லெவியும் செலுத்தாமல் கொண்டு செல்ல, அனுமதி அளிக்க தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த முடிவு இன்று, அதாவது *11-9-2001* முதல் அமலுக்கு வரும்.

*1984*ஆம் வருடத்திய தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் லெவி ஆணை *4(ஏ)* பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படும் இந்த உத்தரவின்படி, தமிழ்நாட்டிலிருந்து எவ்வித லெவியும் செலுத்தாமல் மாநிலத்திற்கு வெளியே நெல் மற்றும் அரிசியை எந்தவித அளவுக் கட்டுப்பாடும் இல்லாமல் கொண்டு செல்லலாம். மாநிலத்திற்கு வெளியே நெல் மற்றும் அரிசியைக் கொண்டு செல்ல இருந்த எல்லாத் தடைகளையும் இந்த அரசு நீக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள குடிமைப் பொருள் வழங்கல் துறையின் கண்காணிப்பிலுள்ள சோதனைச் சாவடிகள் அனைத்தும் விலக்கிக்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவினை, *25* ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு எனது தலைமையில் அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அரசுதான் எடுத்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், குடிமைப் பொருள் வழங்கல் துறையின் கண்காணிப்பிலுள்ள சோதனைச் சாவடிகளில் பணியாற்றி வருகின்ற அரசு ஊழியர்கள் அனைவரும், தமது தாய்த் துறையான வருவாய்த் துறைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பதையும், இதனால் அவர்கள் யாருக்கும் எந்தவித பணி இழப்பும் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், காவிரி டெல்டா பகுதியில் குறுவைப் பயிர் அறுவடையை எதிர்நோக்கி, கொள்முதல் கொள்கையை அறிவிப்பது சம்பந்தமாகத் தமிழக அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. தற்போது செழிப்பாக உள்ள மாநிலத்தின் உணவுக் கையிருப்பு மிகவும் திருப்திகரமாக இருக்கின்ற காரணத்தினாலும், மேலும் விவசாயிகளுக்கு உதவுகின்ற நோக்கத்துடனும்,

2001 செப்டம்பர் 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வருகின்ற குறுவைப் பருவத்தில் இணை கொள்முதல் கொள்கை Parallel Procurement Policy கடைப்பிடிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நேரடிக் கொள்முதல் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யும். அதேபோன்று தனியார் நெல் வியாபாரிகளும், நெல்லை, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

மத்திய அரசு நெல்லுக்கு அறிவித்துள்ளபடி, சாதாரண ரக நெல்லுக்கு, ஒரு குவிண்டாலுக்கு 530 ரூபாயும், 'A' Grade நெல்லுக்கு 560 ரூபாயும் என்ற குறைந்தபட்ச ஆதார விலையுடன், இந்த இரண்டு ரகங்களுக்கும், தமிழக அரசின் ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு 40 ரூபாயும் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-50

மேலும், இரண்டாம் தர நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு 5 ரூபாயும், மூன்றாம் தர நெல்லுக்கு 10 ரூபாயும், தரப் பிடித்தம் Grade cut செய்து வழங்கப்படும்.

18 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல், நிர்ணயிக்கப்பட்ட ஆதார விலையுடன் கூடிய ஊக்கத் தொகை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும். 18 சதவீதத்திற்கு மேல் 25 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல், தகுந்த பணப் பிடித்தத்துடன் கொள்முதல் செய்யப்படும்.

இந்த ஆண்டு குறுவைப் பயிர்க் கொள்முதல் 15-9-2001 முதல் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தொழில் தீர்ப்பாயத்திற்கு விடுதல் மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: இப்போது அடுத்த அறிவிப்பை வெளியிடுகிறேன். தமிழ்நாட்டில் சுமார் 1,200 பஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 3 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக நீதிபதி திரு. நடராஜன் அளித்த தீர்வம் (Justice Natarajan Award) 31-12-1998 அன்று முடிவடைந்த நிலையில், கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக, பஞ்சாலைத்